<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 91/2015 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சரவணன் | நாள் | 26.11.2024 |
| தகப்பனார் பெயர் | கிருஷ்ணராஜ் (எ) ராஜ்கவுண்டர் | | |

<u>வாதி தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–</u>

1) வாதியின் தந்தை சந்திரசேகரும், நானும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால், சரிதான். என் தந்தை பெயர் T.K. ராஜி கவுண்டர் (எ) கிருஷ்ணராஜ் என்றால், சரிதான். எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் பாகபிரிவினை செய்துகொண்டோமா என்றால், செய்து கொண்டோம். எந்த தேதியில் அவ்வாறு பாகபிரிவினை செய்துகொண்டோம் என்றால், கடந்த 2006ம் வருடத்தில் செய்து கொண்டோம்.

2) வாதி மேற்படி என் சகோதரர் சந்திரசேகரரின் ஒரே மகன் என்ற அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். எதற்காக இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால், தடவழி கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி தடவழியில் என்னால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, பைப் லைன் போடப்பட்டுள்ளதை அகற்ற கோரியும், வாதி பரிகாரம் கோரியுள்ளார் என்றால், சரிதான். ஆனால் மேற்படி பைப் லைன் பாகபிரிவினைக்கு முன்பே அமைக்கப்பட்டுள்ளது.

3) என் பெயரில் உள்ள தனிப்பட்ட சொத்துக்களின் சர்வே எண் என்னவென்றால், ச.எண்கள்.284/2B11, 284/2B12 மற்றும் மேலும் இரண்டு சர்வே எண்கள் உள்ளது. மேற்படி இரண்டு சர்வே எண்கள் குறித்து சரியாக நினைவில்லை. மேற்படி அனைத்து சர்வே எண்களில் உள்ள சொத்துக்களில் அட்டை வீடும், ஓட்டு வீடும் உள்ளது. மேற்படி சொத்துக்கள் என்னால் தனியாக கிரயம் பெறப்பட்டவை என்றால், சரிதான். மேற்படி சொத்துக்களை எப்போது கிரயம் பெற்றேன் என்றால், மேற்படி கிரய தேதிகள் குறித்து எனக்கு சரியாக நினைவில்லை.

4) மேற்படி நான்கு சர்வே எண்களிலும் உள்ள நிலங்களை எங்கள் குடும்ப சொத்துக்களை கடந்த 2006ம் வருடத்தில் பாகபிரிவினை செய்வதற்கு முன்பே வாங்கிவிட்டேனா என்றால், ஆமாம். ச.எண்.284/2B11ல் உள்ள நிலத்திற்கு தென்புறமாக வாதியின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளது என்றால், சரிதான். மேற்படி வாதி சொத்தின் சர்வே எண் என்னவென்றால், ச.எண்.284/4A ஆகும். வாதி என்ன தொழில் செய்கிறார் என்றால், விவசாயம் மற்றும் விசைத்தறி தொழில் செய்து வருகிறார். நான் சொல்வது தவறானது என்றாலும் வாதி கைத்தறி பட்டு தொழில் செய்து வருகிறார் என்றாலும், ஆரம்பத்தில் வாதி கைத்தறி பட்டு தொழில் செய்து வந்தார். தற்போது விசைத்தறி தொழில் செய்து வருகிறார்.

5) என் நிலத்திற்கு தென்புறமாக ச.எண்.284/4Aல் உள்ள வாதியின் நிலத்தில் வாதியிடம் பணியாற்றுபவர்கள் வசித்து வருகிறார்கள் என்றால், சரிதான். மேற்படி நிலத்தில் தறிகொட்டகை, குழியலறை, கழிவறையுடன் வீடுகள் கட்டி வாதி தன் பணியாளர்களுக்கு வாடகைக்கு விட்டுள்ளார் என்றால், சரிதான். இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டுள்ளார் என்றால், அது குறித்து எனக்கு சரியாக நினைவில்லை. நீதிமன்ற ஆணையர் நிலத்தை பார்வையிடுவது தொடர்பாக எனக்கு அறிவிப்பு நேரடியாக கொடுத்தும், அதை நான் பெற்றுகொண்டும், நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட சமயத்தில் நான் ஆஜராகவில்லை என்றால், அவ்வாறு ஒரு நிகழ்வு நடைபெற்றதே எனக்கு தெரியாது.

6) இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. கடந்த 11.04.2015ம் தேதியில் நீதிமன்ற ஆணையாளர் எனக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றாலும், அதை நான் வாங்க மறுத்துவிட்டேன் என்றாலும், அது குறித்து எனக்கு சரியாக நினைவில்லை. மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கை குறித்து என் வழக்கறிஞரிடமாவது நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை.

7) நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவற்றிற்கு என் தரப்பில் வழக்கறிஞர் மூலமாக ஆட்சேபனை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், எனக்கு சரியாக நினைவில்லை. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு, அறிக்கை தாக்கல் செய்த விவரங்கள் எனக்கு நன்கு தெரிந்திருந்தும், நான் மேற்படி அறிக்கைக்கு ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. மேற்படி அறிக்கைக்கு நான் ஆட்சேபனை தெரிவிக்காததால் அதில் கண்டுள்ள விவரங்களை நீதிமன்றம் உண்மை என தீர்மானிக்கலாம் என்றால், சரியல்ல.

8) மேற்படி ச.எண்.284/2B11 ஐ ச.எண்.284/2B11A மற்றும் ச.எண்.284/2B11B என உட்பிரிவு செய்துள்ளனர் என்றால், சரிதான். ச.எண்.284/2B11A என்ற இடத்தில் நான் வீடு கட்டி, வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி வீட்டிற்கு தென்புறமாக நான் குடிநீர் குழாய் அமைத்துள்ளேன் என்றால், தென்கிழக்கு பகுதியில் அமைத்துள்ளேன். மேற்படி ச.எண்.284/2B11B தற்போது காலி நிலமாக உள்ளது என்றால், இல்லை. அதிலும் சிறு பகுதியில் வீடு அமைந்துள்ளது. மேற்படி ச.எண்.284/2B11B ல் சிறு பகுதி வீடு போக மீதம் எவ்வளவு காலி நிலம் உள்ளது என்றால், சுமார் 1/2 சென்ட் நிலம் இருக்கும். தென்வடலாக 10 அடி இருக்குமா என்றால், இல்லை. சுமார் 5 அடி இருக்கும். கிழமேலாக 38 அடி இருக்குமா என்றால், சுமாராக 38 அடி இருக்கும். அதிலிருந்து 2 அடி கூடவும் அல்லது குறையவும் இருக்கலாம்.

9) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ல் தென்வடலாக 10 அடி அகலம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளாரா என்றால், தற்போது என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.2 ல் அவ்வாறுதான் உள்ளது. ஆனால், அதில் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என குறிப்பிடவில்லை. மேலும், நிலையில் 5 அடி அகலம் தான் இருக்கும். மேற்படி தென்வடல் 10 அடி அகல, கிழமேல் 38 அடி நீள நிலப்பகுதி வண்டித்தடமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால், சரியல்ல. சிந்தாமணியூர்–

ஓலைப்பட்டி செல்லும் பஞ்சாயத்து ரோட்டிலிருந்து தென்புறமாக ஒரு சாலை செல்கிறது என்றால், சரிதான். மேற்படி சாலை மாணிக்க கவுண்டர் நிலத்திற்கு கிழக்குபுறமும், என்னுடைய நிலத்திற்கு மேற்கு புறமும் உள்ளது என்றால், சரிதான். மேற்படி சாலையின் சர்வே எண்.284/2B6 என்றால், சரிதான்.

10) தற்போது என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் பச்சை வண்ணமிட்டு ABCD என காட்டப்பட்டுள்ள பகுதிதான் மேற்படி சர்வே எண்.284/2B6 ல் அமைந்துள்ள பாதை என்றால், சரிதான். மேற்படி ABCD என காட்டப்பட்டுள்ள சாலை சுமார் 40, 50 வருடங்களாக நிலையில் உள்ளது என்றால், சரியல்ல.

(வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஓம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.